## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு – 2017

---

இலங்கை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்மாணிப்பதற்கான தற்துணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

#### (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02

நியமத்தின் 31 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தில் இடமளிக்கப்பட்ட தேறிய அடிப்படையில் அறிக்கையிடல் காசுப்பாய்ச்சல் தவிர முதலீடு மற்றும் நிதிச் செயற்பாடுகளில் இருந்து வருகின்ற மொத்த காசு பெறுவனவுகளிலும் மொத்தக் காசு கொடுப்பனவுகளிலும் பிரதான வகுப்புக்கள் தனியாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், மூலதன மானியமாக திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 4,589,099 தொகை மற்றும் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 300,000,000 தொகை தனியாகக் காண்பிக்கப்படாமல் தேறிய விளைவான ரூபா 295,410,901 மாத்திரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07

அரசாங்க மானியக் கணக்கில் வைப்பதற்குரிய கணக்கீட்டுக் கொள்கை இனங்காணப்பட்டிருந்த போதிலும், மானியமாகக் கிடைக்கின்ற காணிகளை கணக்கீடு செய்தல் தொடர்பாக உரிய கொள்கையில் உட்படுத்தப்படவில்லை. 2012 ஆம் ஆண்டின் போது மூலதன மானியங்களில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 134,279,913 பெறுமதியான காணிகள் அந்த ஆண்டின் போது சொத்தாகவும் அந்த அளவிற்கு வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக காணிக்காக 5 சதவீத பெறுமானதேய்வு கணிப்பிடும் போது ரூபா 6,713,995 மாத்திரம் அரசாங்கத்தின் மானியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிக்கொடை கணிப்பீடு செய்யும் போது பூர்த்தி செய்யப்பட வருடங்களின் எண்ணிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும், பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யும் போது முழுமையான வருடங்களின் எண்ணிக்கையுடன் மாதங்களின் எண்ணிக்கையும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டமையால் 69 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 754,642 தொகை அதிகரித்து பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த அளவினால் பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணக்குகளில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சிசு செரிய, நிசி செரிய மற்றும் கெமி செரிய செயற்திட்டங்களுக்காக அட்டுறு செலவினத்திற்காக முன்னைய ஆண்டில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக முன்னைய ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 38,299,494 தொகை மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய அட்டுறு செலவினத்திற்காக ரூபா 7,429,132 தொகை குறைத்து ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 30,870,362 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின் கட்டிடத்தின் திருத்த நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 5,903,071 தொகை கட்டிட கணக்கில் மூலதனமாக்காமல் செயற்திட்டச் செலவினமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் வரவு வைக்கப்பட்டமையின் காரணமாக சொத்துக்கள் மற்றும் செயற்பாட்டு இலாபம் என்பன அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள்கொள்வனவு முதலீடுகளில் (REPO) முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 434,845,956 தொகைக்காக மீளாய்வாண்டில் பெறவேண்டிய வட்டி ரூபா 1,780,942 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட காகிதாகிகள் மற்றும் அச்சிடல் பொருள் இருப்புக் கணக்கில் காணப்பட்ட ஆரம்ப மீதி மற்றும் எஞ்சிய இருப்புக்களுடன் சீராக்கி ஆண்டின் போது பயன்படுத்திய அளவை மாத்திரம் செலவாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,276,646 தொகையான காகிதாகிகள் மற்றும் அச்சிடல் இருப்புச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது காணப்பட்ட இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 40 புத்தகங்கள் வீதம் தற்காலிக பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திர புத்தகத் தொகுதிகள் 21 உம், உள்ளபடியான பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரங்களில் 100 புத்தகங்கள் வீதமுமாக 24 தொகுதிகள் மற்றும் 1000 அலகுகள் வீதமான விசேட பிரயாண அனுமதிப்பத்திரங்களின் 14 தொகுதிகள் காணப்பட்ட போதிலும் அவை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1971 இன் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டம் | |
| (i) அதிகாரச்சட்டத்தின் 10(5) பிரிவு | ஆணைக்குழுவின் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் கிடைக்கின்ற தேறிய வருமானத்திலிருந்து மீதியாகின்ற அனைத்துத் தொகைகளும் இணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஆணைக்குழுவின் ரூபா 109 மில்லியன் முதல் ரூபா 190 மில்லியன் வரையில் மிகை காணப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மேல் ரூபா 534,156,919 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| நிதிப்பிரமாணம் 756 | ஆணைக்குழுவால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1978 திசெமபர் 18 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மற்றும் மென்பொருள் தொடர்பாக தனியான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவின் ரூபா 51,965,073 பெறுமதியான கணனி மற்றும் மென்பொருள் என்பவற்றுக்காக அவ்வாறு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 160,889,609 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 190,189,747 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 29,300,138 வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் வருமானம் ரூபா 70,545,726 இனால் அதிகரித்திருந்த போதிலும், விசேட செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 84,366,969 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகக் காணப்பட்டது.

மீளாய்வாண்டினதும், கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறை காணப்பட்டாலும் 2012, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மிகை காணப்பட்டது. எனினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டில் ரூபா 109,057,130 தொகையான ஆணைக்குழுவின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டில் ரூபா 80,262,665 மறைப் பெறுமதியாக ஆகியிருந்த போதிலும், மீண்டும் 2017 ஆம் ஆண்டில் ரூபா 307,494,715 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

**3.2 ஆணைக்குழுவிற்கு எதிராக அல்லது ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அனுமதிப்பத்திரம் மற்றும் கேள்வி அதிகரிக்கும் வழிகளை நீடித்தல் போன்ற விடயங்களுக்குரிய 22 வெளித்தரப்பினர்களால் ஆணைக்குழுவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 22 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

(ii) அவ்வாறே மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அனுமதிப்பத்திரம் தொடர்பாக 03 வழக்குகளும், பெஸ்தியன் மாவத்தையில் ஆசன ஒதுக்கீடுகள் தொடர்பாக 01 வழக்கும், கொழும்பு பதுளை வீதியில் நேர அட்டவணை விநியோகித்தல் தொடர்பாக 01 வழக்கும் ஆக 05 வழக்குகள் ஆணைக்குழுவிற்கு எதிராக விசாரணையில் காணப்பட்டன.

(iii) போக்குவரத்து ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட செல்லுபடியான பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் இன்றி பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடுவதற்காக உரிய தரப்பினருக்கு ஆணைக்குழுவால் நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட 16 வழக்குகள் விசாரணையில் காணப்பட்டது.

(iv) ஆணைக்குழுவிற்கு எதிராக பேரூந்து இருக்கைகளின் தரநியமம் தொடர்பாக ஒரு வழக்கும், அனுமதிப்பத்திரம் தொடர்பாக 02 வழக்குகளும் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணையில் காணப்பட்டன.

(v) சேவை முடிவுறுத்தப்பட்டமை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு எதிராக தொழில்நியாய சபையில் தொடரப்பட்ட 03 வழக்குகள் விசாரணையில் காணப்பட்டன.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்**

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட கீழே குறிப்பிடப்படுகின்ற இலக்குகள் பூரணப்படுத்த முடியாதிருந்தது.

(அ) 03 கெமிசெரிய சேவைகள் காணப்பட்டதுடன் அதில் 28 சேவைகளை அதிகரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 06 சேவைகள் வரை மாத்திரம் அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் 25 சேவைகளை அதிகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நிசி செரிய செயற்திட்டத்தின் கீழ் சேவைகளை 123 முதல் 158 வரை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 130 வரை மாத்திரம் அதிகரித்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் 28 புதிய சேவைகளை திட்டமிடப்பட்ட பிரகாரம் அதிகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) கிளிநொச்சி பேரூந்து நிலையத்தின் நிர்மாண நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 50 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஈ) யாழ்ப்பாண பேரூந்து நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 150 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிர்மாண நடவடிக்கைகளில் 40 சதவீதம் மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கட்டிடத்தை மீளமைக்கும் நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டில் முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் திட்டக் கட்டம் மாத்திரம் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஹிங்குக்கொட பேரூந்து நிலையத்தின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது 30 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 யூலை 12 கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) ஆணைக்குழுவிலிருந்து பேரூந்து வண்டி மற்றும் பிரயாணிகளின் தகவல்களை அவதானிப்பதற்காக ஜீ.பீ.எஸ் கணனி மென்பொருள் வசதிகள் முறைமையொன்றைக் கட்டுயெழுப்புவதற்கு செயற்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது இதற்காக ரூபா 17,570,635 தொகையான கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஜீ.பீ.எஸ் (Global Position System) கணனி மென்பொருள் வசதி முறைமையின் கீழ் 3271 பேரூந்துகள் வண்டிகளுக்கு உரிய உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 767 பேரூந்து வண்டிகளுக்கு மாத்திரமே பொருத்தப்பட்டிருந்தது. அதில் சிம்காட் 697 பேரூந்து வண்டிகளுக்கு மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் பேரூந்து வண்டித் தொகுதியில் 79 சதவீதம் ஜீ.பீ.எஸ் தொழில்நுட்பதத்தை அமுல்படுத்தும் நிலையில் காணப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணம் அறவிடும் முறை காண்பிக்கப்படாதிருந்ததுடன், பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ரூபா 3,000 வருடாந்த கட்டணமொன்றின் கீழ் அந்த அனுமதிப்பத்திரம் வழங்குதல் இடம்பெற்றிருந்தது. இந்த அனுமதிப்பத்திரம் உறவினர் அடிப்படையில் மாத்திரம் வேறொருவருக்கு கையளிக்கும் போது வருடாந்தம் ரூபா 15,000 கட்டணமொன்றின் கீழ் 2010 ஆம் ஆண்டு முதல் புதிதாக வழங்குகின்ற அனுமதிப்பத்திர கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு தெரிவு செய்யப்பட்ட நபருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் அதிகாரச்சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக ஒரே வகைக்கான கட்டணம் 03 வகைகளின் கீழ் அனுமதிப்பத்திரம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் 2018 யூலை 05 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட 3171 மொத்த அனுமதிப்பத்திரங்களில் 62 சதவீதமும், ரூபா 3,000 தொகையான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தின் கீழ்

வழங்கப்பட்டிருந்ததுடன் மொத்த அனுமதிப் பத்திரங்களில் 29 சதவீதம் ரூபா 15,000 தொகையான வருடாந்த புதுப்பித்தல் கட்டணத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், மொத்த அனுமதிப்பத்திரங்களில் 91 சதவீதம் கேள்வி கோரலின்றி வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கக் கூடியதாக இருந்த கணிசமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சாதாரண மற்றும் அதிவேக வீதிகளுக்காக ஆய்வு மேற்கொள்வதன் மூலம் புதிய வீதிகளை இனங்கண்டு, புதிய பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 25(ஆ) பிரிவின் பிரகாரம் ஒரு வருடத்திற்குக் குறையாததும், மூன்று வருடங்களுக்கு மேற்படாததுமான காலப்பகுதிக்காக அமுலாகும் வரையில் பிரயாணிகளின் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணான வகையில் மீளாய்வாண்டில் பின்வரும் அடிப்படையில் தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(i) சாதாரண வீதிகளுக்காக நாளொன்றிற்கு ரூபா 200 கட்டணம் அறவிடும் அடிப்படையில் மற்றும் பிரதான அலுவலகம், பெஸ்தியன் மாவத்தை அலுவலகம் மூலம் 5819 தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் நாளொன்றிற்கு ரூபா 1,500 மற்றும் ரூபா 1,000 வீதம் அறவிடப்பட்டு முறையே 2274 மற்றும் 2050 ஆக கூட்டுமொத்தமாக 4324 தற்காலிக அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. மேலும், அதிவேக வீதியில் 2015 யூலை 25 ஆந் திகதி முதல் 2017 யூன் 30 வரையான காலப்பகுதியில் 65 அதிசொகுசு பேரூந்து வண்டிகளுக்காக நாளொன்றிற்கு ரூபா 2,500 வீதம் அறவிட்டு தற்காலிக பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. 2017 யூலை 01 ஆந் திகதி முதல் மேற்கூறப்பட்ட 65 பேரூந்து வண்டிகளில் 48 பேரூந்து வண்டிகளுக்காக நிறுவனத்தால் கணிப்பீடு செய்யப்பட்ட தினமொன்றில் ஆகக் குறைந்த தொழில்நுட்ப பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றி போட்டியாளர் கூறுவிலைகளைப் பெற்று அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நபர்கள் தெரிவு செய்யப்படாமையினால் நிறுவனத்திற்கு பெறக்கூடியதாக இருந்த வருமானம் குறைவடைந்திருந்தது.

(ii) ஆணைக்குழுவில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் அல்லாத நேரக் குறிப்பாளருக்கு தற்காலிக அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மஹரகம, கடுவெல மற்றும் கடவத்த பேரூந்து நிலையங்களில் நேரக் குறிப்பாளரால் நாயொன்றுக்கு ரூபா 1,500 மற்றும் ரூபா 1,000 வீதம் அறவிடப்பட்டு முறையே 947 மற்றும் 25 ஆக 972 அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

(ஈ) தென் மாகாண பிரயாணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு 2017 செப்தெம்பர் முதல் 2018 மே மாதம் வரை வழங்கப்பட்டிருந்த 139 தற்காலிக அனுமதிப்பத்திரப் புத்தகங்கள், காசு மற்றும் அலுவலக பிரதியுடனான புத்தகங்கள் என்பன 2018 யூலை 19 கணக்காய்வுத் திகதி வரையிலும் மீள ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் பிரகாரம் ஏதாவது ஒரு நபருக்கு கையளிக்கப்பட்ட பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரமொன்று இன்னொருவருக்கு கையளிக்க முடியாதிருந்ததுடன், அவ்வாறான கையளித்தல் பூச்சியம் மற்றும் அதிகாரமற்றதாகும். எனினும் ரூபா 5,000 கையளித்தல் கட்டணம் மற்றும்

புதுப்பித்தல் கட்டணமாக வருடாந்தம் ரூபா 15,000 வீதம் அறவிடும் அடிப்படையில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 63 அனுமதிப்பத்திரங்கள் உறவினர்களின் அடிப்படையில் உரித்து மாற்றப்பட்டிருந்தது.

(ஊ) அதிவேக வீதிக்கு வெளிச் சுற்றுப்பாதை ஊடாக பிரதான நகரங்களுக்கு பேரூந்துகள் ஓட்டத்தில் ஈடுபடும் இயலுமை தொடர்பான ஆய்வொன்றைச் செய்வதற்கு மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழு அதற்காக ரூபா 2,127,465 செலவினமொன்றைச் செய்திருந்தது. அதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகம் இடைக்கால அறிக்கையை மாத்திரம் 2015 ஆகஸ்ட் 04 ஆந் திகதி சமர்ப்பித்திருந்ததுடன், புதிய செயற்திட்டமாக அமுல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும், பல்கலைக்கழகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விலை மதிப்பீட்டுடன் ஆணைக்குழு இனங்காதிருந்ததுடன், ஆணைக்குழுவினால் அந்த செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், 2018 யூலை 19 கணக்காய்வுத் திகதி வரையிலும், அந்த நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஆணைக்குழுவிற்கு முடியாதிருந்தது.

(எ) வட மாகாணத்தில் பிரதானமான பேரூந்து இடமாறல் நிலையமொன்றாக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 166,393,051 செலவில் வவுனியா நகரத்தில் பேரூந்து நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அந்த நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பந்தகாரரால் 2017 சனவரி 15 ஆந் திகதி ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த பேரூந்து நிலையம் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அக்காலத்தில் அந்தப் பதவியணியினரின் சம்பளம், சுத்திகரித்தல் செலவினம், மின்சாரம், தொலைபேசி மற்றும் நீர்ப்பட்டியல்களுக்காக ரூபா 2,807,541 செலவிடப்பட்டிருந்ததுடன் பேரூந்து நிலையத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினர் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இந்தக் கிரயம் பயனற்ற செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உள்ளபடியான பதவியணியினருடன் ஒப்பீடு செய்த போது 15 பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டதுடன் 03 பதவிகளில் மிகை காணப்பட்டது. வெற்றிடமான பதவிகளில் 05 பதவிகள் நிறைவேற்று மட்டத்தின் பதவிகளாக இருந்ததுடன் 2018 யூலை 16 ஆந் திகதி வரையிலும் அந்த பதவிகளுக்காக ஆட்சேர்த்தல் இடம்பெறாதிருந்ததுடன் பதில் கடமை அடிப்படையில் அந்தப் பதவிகளின் கடமைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தது. பணிப்பாளர் நிதி மற்றும் பெறுகை பதவிகளில் வெற்றிடம் காணப்பட்டமையின் காரணமாக நிதி அதிகாரங்கள் பகிர்ந்தளித்தல் தொடர்பாகவும், நிறுவனத்தின் பெறுகை நடவடிக்கைகளை உரிய பிரகாரம் மேற்கொள்வதற்கு தடையாக இருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிந்திருந்ததுடன், அதன் பணிகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களையும், இலக்குகளையும் அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை என்பன கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 30 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2018 மார்ச் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

#### 6.2.1 பெறுகை

நிறுவனத்தால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் விரிவான பெறுகைத் திட்டமொன்றும், பெறுகை கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 6.2.2 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மெதிரிகிரிய பேரூந்து நிலைய நிர்மாண நடவடிக்கைகள் 2016 ஒக்தோபர் 11 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்திட்டக் கிரயம் ரூபா 68,197,933 ஆகும். உடன்படிக்கையின் பிரகாரம் கால நீடிப்புக்களும், பின்னர் இந்த செயற்திட்டம் 2017 மார்ச் 06 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், செயற்திட்டத்தின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு ஆணைக்குழுவிற்கு 2018 மார்ச் 28 ஆந் திகதியே கையளிக்கப்பட்டிருந்ததுடன் இந்த பேரூந்து நிலையத்தை மக்களின் உரித்திற்கு மேலும் 04 மாத கால தாமதத்திற்கு பின்னரே சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கிண்ணியா II ஆம் கட்டம் செயற்திட்டத்தின் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டக் கிரயம் ரூபா 7,137,740.50 ஆக இருந்ததுடன் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2017 சனவரி 18 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாண நடவடிக்கைகள் உடன்படிக்கையின் பிரகாரம் 2017 மார் 18 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நிர்மாணங்கள் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதியே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. இந்த பேரூந்து நிலையம் மக்களுக்கு 2018 ஆகஸ்ட் 22 ஆந் திகதியே திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரும், ஒரு வருட காலம் கடந்திருந்த போதும் இந்த பேரூந்து நிலையம் பொதுமக்களுக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு செயற்திட்ட நடவடிக்கைகள் நீண்டகாலம் தாமதமாகியமை தொடர்பில் ஆணைக்குழு கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீட்டை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பீடு செய்த போது வருமானம் மற்றும் செலவினங்களின் 15 தலைப்புக்களில், 10 சதவீதம் முதல் 160 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) கேள்வி கோரல்களின் மூலம் பிரயாணிகள் சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படாமை.<br>(ii) அனுமதிப்பத்திரம் விநியோகித்தலில் தாமதம்<br>(iii) அனுமதிப்பத்திரம் தொடர்பாக நாளதுவரையான தகவல்களை உள்ளடக்கிய பதிவேடு பேணப்படாமை.<br>(iv) தற்காலிக சேவை அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டமை.<br>(v) உறுதிச்சீட்டுக்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை.<br>(vi) சகல கொடுப்பனவுகளும் உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட்ட தொகை என உறுதிப்படுத்தப்படாமை |
| (ஆ) பெறுகை நடவடிக்கைகள் | விரிவான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்படாமை மற்றும் பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்படாமல் பெறுகைகள் இடம்பெற்றமை. |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடத்திற்காக ஊழியர்களைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) நிதிக் கட்டுப்பாடு | திறைசேரியிலிருந்து பெறப்பட்ட பணம் உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படாமை |
| (உ) வாகனக் கட்டுப்பாடு | (i) 06 மாதங்களுக்கு ஒரு தடவை எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை<br>(ii) நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் எரிபொருள் சமப்படுத்தல் மேற்கொள்ளப்படாமை.<br>(iii) நாளாந்த ஓட்ட அட்டவணை குறித்த கால எல்லையின் பிரகாரம் தயாரிக்கப்படாமை<br>(iv) விபரங்களை உள்ளடக்கிய வாகனம் தொடர்பான பதிவேடொன்று பயன்படுத்தப்படாமை. |